**செய்தி வெளியீடு எண்: 244** **நாள்: 31.03.2019**

<u>பொது (தேர்தல்கள்– 5) துறை</u>

## <u>செய்தி வெளியீடு</u>

திரு. ஹேமந்த் கல்சன், இ.கா.ப., என்பவரை 27.சிதம்பரம் (தனி) மற்றும் 28.மயிலாடுதுறை மக்களவைத் தொகுதிகளுக்குக் காவல் பார்வையாளராக (Police Observer) இந்தியத் தேர்தல் ஆணையம் நியமித்திருந்தது. மேற்காணும் காவல் பார்வையாளர் 31.03.2019 அன்று அதிகாலை 1.00 மணியளவில் அரியலூர் சுற்றுலா மாளிகையில் கிரேடு – II போலீஸ் கான்ஸ்டபிளின் துப்பாக்கியால் 9 முறை வானத்தை நோக்கி சுட்டதாக அரியலூர் மாவட்டத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சியர் அறிக்கை அளித்தார். அவ்வறிக்கை இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டது.

2. திரு.ஹேமந்த் கல்சன், இ.கா.ப., இந்தியத் தேர்தல் ஆணையத்தால் உடனடியாக தேர்தல் பார்வையாளர் (Police Observer) பொறுப்பிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டுள்ளார். மேலும், இது குறித்து முதல் தகவல் அறிக்கையை மேற்காணும் அலுவலருக்கு எதிராக சம்பந்தப்பட்ட சட்ட விதிகளின் கீழ் பதியுமாறு கோரியுள்ளது. எனவே, இது சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

3. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க, 25.பெரம்பலூர் மற்றும் 26.கடலூர் மக்களவைத் தொகுதிகளுக்கான காவல் பார்வையாளர் திரு. தேவராஜு, இ.கா.ப., என்பவரை 27.சிதம்பரம் (தனி) மற்றும் 28.மயிலாடுதுறை மக்களவைத் தொகுதிகளுக்குக் காவல் பார்வையாளராக கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. புதிய காவல் பார்வையாளர் வரும் வரை இவர் இந்த பொறுப்பு வகிப்பார். இந்நிலையில் இந்தியத் தேர்தல் ஆணையம் திரு. எஸ். என். சித்தராமப்பா, இ.கா.ப., அவர்களை 27.சிதம்பரம் (தனி) மற்றும் 28.மயிலாடுதுறை மக்களவைத் தொகுதிகளுக்குக் காவல் பார்வையாளராக நியமித்துள்ளது.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**